தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1977, ஜுலை 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நியமன உறுப்பினர், திருமதி மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் அவர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வார்கள்.

* திருமதி மார்கெரட் எலிசபெத் பிலிக்ஸ் அவர்கள் உறுதி மொழி எடுத்துக் கொண்டார்கள்.

2. நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. கே. வீ. இராமசாமி அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை நாமக்கல் பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. கே. வி. இராமசாமி அவர்கள் 19—7—1977ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்து இப் பேரவையின் வருத்தத்தையும் இரங்கலையும் அன்னாரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு இப்பேரவையின் சார்பில் நான் தெரி வித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும் படி கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுன மாக எழுந்து நின்றனர்.)

---

* ஆங்கிலத்தில் கடவுள் பெயரால் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.